# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness for Prosecution – PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Caste | : |
| S/o. | : ராஜகோபால் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 02.07.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் ஆலச்சம்பாளையம், காடகாரன் வளவு, காட்டுரில் குடியிருக்கிறேன். நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றி வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஆனந்தன் எனக்கு உறவினர் ஆவார். அவர் துர்கை கோவிலில் பூசாரியாக இருந்து வந்தார்.

இறந்துபோனவருக்கும் ஆஜர் எதிரிக்கும் சீட்டு போட்டது மற்றும் டிராக்டர் வைத்து தொழில் செய்த வகையில் இருவருக்கும் விரோதம் இருந்தது. சம்பவத்தன்று விடியற்காலை 5.00 மணிக்கு இறந்தவரின்

தம்பி தருமன் எனக்கு போன் செய்து ஆஜர் எதிரி தன்னுடைய அண்ணனை வெட்டிவிட்டதாக தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்னர் பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். 7.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவருக்கு மார்பு, தோள்பட்டை, முழங்கை ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தது. அரசு மருத்துவமனையில் பிரேதத்தை வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். அவர்களுக்கு இடையே இருந்த முன்விரோதத்தை ஆய்வாளரிடம் சொன்னேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது மைத்துனர் எப்போது முன் விரோதம் இருப்பதாக சொன்னார் என்றால் 10 வருடத்திற்கு முன்னர் தனக்கும் எதிரிக்கும் டிராடர் சம்மந்தமாகவும் சீட்டு சம்மந்தமாகவும் பிரச்சனை இருக்கிறது என்றும் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் என்ன செய்யலாம் என்று சொன்னேன் என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பிரச்சனையை தீர்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். அந்த பிரச்சனை அதோடு தீர்ந்துவிட்டது என்றால் சரி. ஆய்வாளர் எத்தனை மணிக்கு இறந்த நபரின் பிரேதத்தை அ.சா.1–னிடம் ஒப்படைத்தார் என்றால் நான் 8.30 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டேன். அதனால் எத்தனை மணிக்கு ஒப்படைத்தார் என்று தெரியாது. நான் அரசு மருத்துவமனைக்கு போகவில்லை என்றும் ஆய்வாளர் என்னை

விசாரிக்கவில்லை என்றும் இறந்த நபர் எனக்கு உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.